77

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

புள்ளிருக்கு வேளூர் என்னும்

(வைத்தீசுவரன்கோயில்

தெற்குவீதி நகரமடாலயத்தில்

எழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி

# திருப்பதிகம்.)

No.

5 - JAN 1931

இஃது

இராமநாதபுரம் சேது சமஸ்தான வித்வான்

திரு, P. சிவசாமிசேர்வையவர்களால்

இயற்றி,

...ம்பாள் பிரஸில் அச்சிடுவிக்கப்பெற்றது.

1930. [300.

026:38.21193 M4
N30
171266

உ

மதுரைச் சங்கத்து வித்துவான்

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்து

வித்துவான்

## வேளூர், ச. சோமசுந்தரதேசிகரவர்கள்

இயற்றிய சாற்றுக்கவி.

நற்புகழ்சேர் வேளூர் நகரமடத் தின்வளரும்
பொற்புறுமுத் துக்குமரன் பூங்கழற்கே—கற்பனையாய்ச்
செந்தமிழ்ப் பாப்பதிகஞ் செப்பினான் நன்முகவை
வந்தசிவ சாமிசேர் வை.

---

மதுரைச் சங்கத்து வித்துவான்

## ஸ்ரீகாழி, ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை

அவர்கள் இயற்றியது.

தெள்ளு தெண்டிரை திவண்மணி கொழித்திடச்
செழும்புனல் குடைமாதர்
வள்ள வாயிதழ் துவரென மிளிர்தரு
வைத்திய புரிநாப்பண்
வள்ள லாரமை நகரமா மடத்துறை
வள்ளிநா யகன்மாலை
யுள்ள மெய்ச்சிவ சாமிவேள் முகவையான்
உரைத்தனன் புவிவாழி.

---

OFFICE OF THE REGISTRAR
5 JAN 1931

171266

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# புள்ளிருக்கு வேளூர் நகரமடத்து ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருப்பதிகம்.

---

## கற்பகவிநாயகர்காப்பு.

நேரிசை வெண்பா.

புள்ளிருக்கு வேளூரிற் போற்று நகரத்தார்க்
குள்ளிருக்கு மாமடத்திற் கோயில்கொளும்—வெள்ளெருக்கன்
செல்வமுத் துக்குமரன் செந்தமிழ்ப்பா விற்கருள்வான்
கல்லகற்ப கத்தானை நன்கு.

## பதினான்கு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

திருமருவு மார்பனும் வேதமுறை நாவனுந்
திகழ்தருவி னிழ லரசும்
சித்திமிகு முப்பத்து முக்கோடி தேவரும்
ஜெயஜெய போற்றி யெனவே
யுருமருவு கதிர்மதிக ளோராறு கனறதவிர்ந்
தோங்குநிறை வாக வொளிர
வொவ்வொன்றி னுங்கருணை மாபிரச மூற்றெடுத்
தொளிர்குவளை யாமி ரண்டுங்
குருமருவு வாம்பலம் போதொன்று மணிபெறக்
குமிண்சிரிப் போட லர்ந்து
கொண்டதென வற்புதத் தோற்றமுக மண்டலம்
குலவுமோ ராறு நிலவ
மருமருவு வேளூரி னகாமட மீதிலே
மன்னுமொரு தெய்வ மணியே
வைத்யநா தன்மருவு தையலு மகிமடியில்
வந்தமுத் துக்கும ரனே. (1)

2531
894.811

களங்குலவு கண்டனு முளங்கரைய வேமொழி
கண்டகுரு வான வடிவே
கனகவட மேருவென மருவுமோ ரீராறு
கற்பகத் தாரு வெனவே
யுளங்குலவு பத்திமிகு தொண்டருக் கினிதருள
வோங்குபுய நீப முருகா
வுண்மைமொழி மாறாத வன்பருள மீதிலே
யுற்றருளு ஞான வொளியே
தளங்குலவு செய்யகழு நீர்மருவு மார்பனே
சண்முகக் கோல வுருவே
தயங்குமண் டலங்களை யொருநொடியி லேவலந்
தருமயிலின் மீது வருவாய்
வளங்குலவு வேளூரி னகரமட மீதிலே
மன்னுமொரு தெய்வ மணியே
வைத்யநாதன்மருவு தையனு யகிமடியில்
வந்தமுத் துக்கும ரனே. (2)

உன்னரிய வாக்கத் தொழிற்குரிய வேதனுக்
குள்ளவறி யாமை கண்டே
யுவந்தயன் முடித்தலைகள் குட்டுறச் செய்துசிறை
யுறவைத்து நீடு தொழிலைப்
பன்னரிய முறையிலே யனுயாச மாகவே
பார்த்திட்ட வேத குருவே
பழமறை யெனும்பெரிய கலைமுடி வதனிலே
பதிந்தகரு வூல மதிலே
துன்னரிய நெறியிலே கலைமருவு செல்வராந்
தூயதவர் தேட வொளிருந்
துரியங் கடந்திட்ட பரநாத மூலமாஞ்
சுகாரம்ப மான வெளியே
—ரிய வேளூரி னகரமட மீதிலே
மன்னுமொரு தெய்வ மணியே
வைத்யநா தன்மருவு தையனு யகிமடியில்
வந்தமுத் துக்கும ரனே. (3)

தீராத நோய்களுந் தீரவொரு மண்ணினைச்
　　செய்யவமு தாக வருளுந்
தெய்வபண் டிதன்பரவு சித்துவிளை யாடிவரு
　　தீரப்ர தாப வயிலாய்
போராடு மசுரர்படை நீறுபட வேயமர்
　　புரிந்துவிளை யாடு குமரா
புனிதங்க ளிந்துலவு சரணார விந்தனே
　　பூததயை யான வடிவே
சீராடு கற்பகா டவியில்விளை யாடுமொரு
　　தெய்வானை தழுவு களிறே
சீதகள பத்தணச் சுவடுமா ருதவோர்
　　திண்புயா வெய்ய கலிதான்
வாராத வேளூரி னகரமட மீதிலே
　　மன்னுமொரு தெய்வ மணியே
வைத்யநா தன்மருவு தையனா யகிமடியில்
　　வந்தமுத் துக்கும ரனே. (4)

நந்துற்ற சூல்தந்த முத்தமுஞ் சலசமும்
　　காடரிய வேழ முடனே
நளிரனமக டருமுத்தும் நென்மணிகள் குவிமுத்தும்
　　நன்னிலவு கால வதனா
விந்துற்ற தெனமயக் காற்குமுத முதலாய
　　வினிதுபக லூடு மலர
வினனுநின் றேங்கிட விரவபக றலைமயங்
　　கிமயவர்த நாட தெனவே
முந்துற்ற புகழ்கெழுஞ் சோணா டெனுங்கனி
　　முகத்தினி விலங்கு மினிய
மூன்குளத் திற்கவின நின்றிலகு திலதமா
　　முழுவோசை நீடு மிசையால்
வந்துற்ற வேளூரி னகரமட மீதிலே
　　மன்னுமொரு தெய்வ மணியே
வைத்யநா தன்மருவு தையனா யகிமடியில்
　　வந்தமுத் துக்கும ரனே. (5)

தேன்பரவு நனைவரும் பொழிலடர்ந் திருள்புகந்
தேறங்குதம் காய விடமாய்த்
திகழ்தரு மேலனஞ் சாரலிற் கவண்டெறி
சிறுபுனோச் சாவ ணங்கின்
மான்பரவு விழிகள்களி யாட்டயர்ந் தாடிட
மன்னுமூப் பான வடிவாய்
மலைநகுலவு சாலைபல கடந்துசேக் கிட்டின்
மாணடிக ளோய மெலவே
கான்பரவு தாரைகளி னூடே நடக்துமேற்
கடியபசி கூறி யவள்பால்
கருதரிய தேன்விரவு யாவினுக் கேக்குற்ற
கருணைவ யாவ ருகவே
வான்பரவு வேளூரி னகரமட மீதிலே
மன்னுமொரு தெய்வ மணியே
வைத்யநா தன்மருவு தையனு யகிமடியில்
வந்தமுத் திக்கும ரனே. (6)

உரங்கொண்ட தேன்றுளித் துலராது தெய்வமண
மோங்குநீ பத்மதா டையலு
முலகங்க ளீன்றதாய் முலையமுத் மணமரு
தொழுகுதிரு வாயி னழகுங்
கரங்கொண்ட வீரரண சூரனுடல் பாறவே
கண்டவடி வானக யயிலுங்
கருதரிய வேதங்க ளோலமிட் டலறியுங்
காணாத பாத விணையுஞ்
சிரங்கொண்ட மணிமுடிக ளோராறும் ஈராறு
செங்கமல வக்க மலராற்
றிக்கெலாம் பெருகிநிறை கருணைப்ர வாகமுந்
தெரியமயில் மீது வருவாய்
வரங்கொண்ட வேளூரி னகரமட மீதிலே
மன்னுமொரு தெய்வ மணியே
வைத்யநா தன்மருவு தையனு யகிமடியில்
வந்தமுத் திக்கும ரனே. (7)

800 009-
171266
Q26:38 2N93 V19
N30

கண்ணிணைக் கொளியுநீ யொளிபெறும் பயனதாங்
காட்சிக்கு நேர் பொருளும்நீ
கணக்கில்புவ னங்கணீ சாமசர மானவைநீ
காண்டகைய பூத மவைநீ.
யெண்ணரிய வுயிருநீ யுயிரினுக் குயிருநீ
யெழில்தருஞ் சோதி யுருநீ
யெழுதரிய மறையுநீ மறைமுடிவு மானவைநீ
யெங்குநிறை கின் றவனுநீ
அண்ணலந் தெய்வநீ அருவநீ யுருவநீ
யருவுருவ மாய வனுநீ
அன்றின்று மற்றென்று முள்ளவனு நீயெனக்
காதிமுடி வற்ற வனுநீ
மண்ணிலவு வேளூரி னகரமட மீதிலே
மன்னுமொரு தெய்வ மணியே
வைத்யநா தன்மருவு தையனு யகிமடியில்
வந்தமுத் துக்கும ரனே. (8)

ஓகைபெரு மடியவர்த முளசலச செக்குவிட்
டுள்ளுடைந் தின்ப பிரச
மூற்றெடுத் திடவுதய மாகின்ற ஞானவெண்
றாமொருவ சீத வினிய
பாகையற வென்றமென் மழலைபயில் மாண்மகள்
படீரமுலை மேவு குமர
பத்திவலை யிற்படும் பரமகல் யாணியாம்
பசுங்கிளிக் குற்ற புதல்வ
தோகைமயின் மீதிலிரு காகுமயி லூடுமே
தோன்றகிரு பாகுகி லெனுஞ்
சுத்தசாட் சாத்கார பராபர நிராமய
சுகுணநீ யிங்கு வருவாய்
வாகைபெறு வேளூரி னகரமட மீதிலே
மன்னுமொரு தெய்வ மணியே
வைத்யநா தன்மருவு தையனு யகிமடியில்
வந்தமுத் துக்கும ரனே. (9)

தஞ்சமென வந்துநின் செஞ்சரண மேத்தியே
　　தழலின்மெழு காக வருகித்
தாங்கரிய விண்மாரி யன்னவிரு கண்மாரி
　　தந்திடவு மயிர் சிலிர்க்க
விஞ்சுநட மாடியே தன்னையு மறந்துமெய்
　　விதிர்விதிர்ப் பெய்தி யுளறி
விளங்குழுவ லன்பனாய் நாயினுங் கடையனேன்
　　மேவவரு நாளு முளதோ
நஞ்சுதனை யமுதமா யுண்டுநட மாடிவரு
　　நம்பனுக் கேற்ற குருவே
நலமே பழுத்தருட் குணமே கனிந்தெவரு
　　நாடரிய தேவ வருவாய்
மஞ்சுவரு வேலூரி னகரமட மீதிலே
　　மன்னுமொரு தெய்வ மணியே
வைத்யநா தன்மருவு தையனா யகிமடியில்
　　வந்தமுத் துக்கும ரனே. (10)

## வாழ்த்து.

சீர்தரு குமர வேளின் சேவடிப் போது வாழி
ஏர்தரு பதிகம் வாழி யியம்பினோர் யாண்டும் வாழி
பேர்தரு வேலூர் வாழி பிறங்கிய மடங்கள் வாழி
வார்தரு மடியர் கூட்டம் வாழிய வூழி தானே.

171266

## தனி.

கத்தக் கடல்சூழ் புவியினுக் கோர்தில கம்மெனச்சொல்
கத்தப் பயில்வயல் வேளூர்க் குமரனும் நாளடைவிற்
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் தேவின் றெரிசனையாற்
பத்துப்பத் தாயிரஞ் சண்டன்வந் தாலும் பயமில்லையே.

எத்தும் வினைவிற் செலுமிரு கோட்டிள வேர்திழையைத்
தத்தங் கடாத்தொரு கோட்டிபத் தாற்பயந் தந்தணைந்த
முத்துக் குமரனை வேளூர் மருந்தினை முன்னினர்க்குச்
செத்துப் பிறக்கின்ற தெய்வமென் னேவினிச் செய்வதுவே.

மெத்த வருத்த மிடிக்கோடை தன்னுன் மெலிந்தநெஞ்சே
சித்தத் திகழ்புள் ளிருக்குவே ளூரினைச் சேர்ந்தனுற்
செத்துப் பிறக்கின்ற தெய்வங்க ளையகன் தேங்கடம்பார்
முத்துக் குமாரகொண் மூவருண் மாரி முழங்கிடுமே.

பருந்தும் நிழலு மெனநெடு நாளெனைப் பற்றியிங்குப்
பெருந்துன் பினையே தருங்கலி யேநாம் பிரிந்துவிட
மருந்து தருந்திரு வைத்திச் சுரனை வணங்கியென்றுந்
திருந்தும் படிவிதி மூட்டிய தாலினிச் செய்வதென்னே.